1st November 1958]

SRI A. VEDARATHNAM : கேள்வி 781-ல் போஸ்ட் பேசிக் பள்ளிகள் என்பதற்கு பின்னிலே ஆதாரப்பள்ளி என்று போட்டிருப்பதாக கூறுகிறார்கள். ஆதார உயர்நிலைக் கல்வி என்றுதான் அதற்குச் சொல்லுவது. ஹிந்தியிலும்கூட 'உத்திரப்புனியாதி' என்றுதான் சொல்லுவார்கள். நாளைக்குத் திருப்பி அச்சிடும்போதாவது இதைத் திருத்தவேண்டுமென்று சொல்லுகிறேன்.

MR. SPEAKER : தயவு செய்து என்னுடைய அறையில் வந்து இதைப்பற்றிச் சொல்லவும்.

Electrification of villages in Ramanathapuram district

* 782 *Q.*—SRI K. RAMACHANDARAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the number of villages electrified during 1957–58 in the Ramanathapuram district and

(*b*) whether the Government have any proposal to extend electricity to the interior villages of Mudukulathur, Paramakudi and Tiruvadanai taluks in the Ramanathapuram district?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) 113.

(*b*) Yes, Sir. Proposals for the extension of electricity to ten villages in these taluks have been approved and the work has also been taken up. Proposals for the extension of electricity to 5 more villages are under consideration.

Dalmia Cement Factory

* 783 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) திருச்சி ஜில்லா, டால்மியா சிமிட்டி தொழிற்சாலையைச் சேர்ந்த 4-வது குவாரியில் வேலை செய்யும் தொழிலாளர்களை 1958-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 3-ந் தேதி போலீசார் அரஸ்ட் செய்த விஷயம் சர்க்காருக்குத் தெரியுமா ?

(ஆ) எத்தனை பேர்கள் ?

(இ) அதற்குக் காரணம் என்ன ?

(ஈ) ஜாமீனில் விடப்பட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) to (*d*) No worker of the Fourth Quarry of the Dalmia Cement Factory was arrested on 3rd September 1958.

Veterinary dispensaries for each firka

* 784 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) பிர்க்காவுக்கு ஒரு கால் நடை ஆஸ்பத்திரி ஆரம்பிக்க உத்தேசம் உண்டா ?

(ஆ) எப்போது முதல் ?

[1st November 1958

(இ) வடாற்காடு ஜில்லாவில் நடமாடும் கால்நடை ஆஸ்பத்திரி எந்த தேதி முதல் ஆரம்பமாகும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) There is at present no proposal to open one veterinary dispensary for each firka.

(b) Does not arise.

(c) One Motorised Mobile Unit with necessary staff has been sanctioned by Government for the North Arcot district during the current year 1958–59. The unit will commence functioning as soon as a suitable vehicle is obtained for which necessary action is being taken.

SRI V. K. KOTHANDARAMAN : வட ஆற்காடு ஜில்லாவில் கால் நடை ஆஸ்பத்திரிகள் போதுமான அளவு இல்லாத காரணத்திஞல் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிருர்கள். குடியாத்தம் தாலூகாவில் $3\frac{1}{2}$ லட்சம் மக்கள் கொண்ட பகுதியில் ஒரே ஒரு கால் நடை ஆஸ்பத்திரிதான் இருக்கிறது. குறைந்த பட்சம் இரண்டு பிர்க்காவுக்கு ஒரு ஆஸ்பத்திரியாவது உடனடியாக ஏற்படுத்த முயற்சிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இன்னும் மற்ற மாவட்டங்களிலும், மற்றத் தாலூக்காகளிலும் கூட கால் நடை ஆஸ்பத்திரிகள் போதுமான அளவு இல்லை. போதிய அளவு வைக்கவேண்டுமென்ருல் நிதி நிலைமையைப் பொருத்திருக்கிறது.

9-30 a.m. SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Is there any proposal before the Government to extend this mobile veterinary service to other districts also?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I would like to have notice.

SRIMATHI KAMALAMBUJAMMAL : கால் நடைகளில் அதிக கவனம் செலுத்தி வருகிற இந்த நாட்களில், கால்நடைகளுக்கு வரும் நோய்களைத் தடுப்பதற்கு வேண்டிய வைத்தியசாலைகள் இல்லாததஞல் நோயிஞல் கால் நடைகள் நஷ்டமாகிறது. அதன் காரணமாக பிர்க்கா வாரியாக கால்நடை ஆஸ்பத்திரிகளை வைக்க அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றித்தான் நான் முன்பே சொன்னேன். கால் நடை ஆஸ்பத்திரி எல்லா இடங்களிலும் ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தைப்பற்றி அபிப்பிராய பேதம் கிடையாது. அதை நிறைவேற்றுவதில் நிதி நிலைமையை அனுசரித்துச் செய்ய வேண்டியிருக்கிறது.

SRI P. G. KARUTHIRUMAN : கால் நடை ஆஸ்பத்திரி ஏற்படுத்துவதில் கால் நடைகளின் எண்ணிக்கையைக் கொண்டு ஏற்படுத்தப்படவேண்டுமா ? மக்களுடைய எண்ணிக்கை எந்தப் பகுதியில் அதிகமாக இருக்கிறது என்பதைக் கணக்கில் கொண்டு ஏற்படுத்துவதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கால் நடை இருப்பது ஜனங்களுக்காகத்தான். எங்கே ஜன சங்கியை அதிகமாக இருக்கிறதோ அங்கே கால் நடைகளின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கும் என்றுதான் ஜன சங்கியைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

1st November 1958]

SRI A. V. P. ASAITHAMBI : விருதுநகரில் இருக்கிற ஆஸ்பத்திரியைத் தன் பெயரில் ஏற்படுத்துவதாக இருந்தால் அதற்கு ஆகும் செலவை எல்லாம் ஒப்புக்கொள்வதாக திரு வி. எ. எம். ரத்தினம் என்பவர் அரசாங்கத்திற்கு எழுதியிருப்பதாக அமைச்சர் சொன்னுர்களே. அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிருர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : தனிக்கேள்வி போடவேண்டும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

SRI A. VEDARATHNAM : இப்போது இருக்கிற கால்நடை ஆஸ்பத்திரிகள் எல்லாவற்றிலும் டாக்டர்கள் இருக்கிருர்களா ? இல்லையானுல் அங்கெல்லாம் டாக்டர்களைப் போடுவதற்கு அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கால்நடை வைத்தியர்களைப் பொருத்தமட்டில் பற்றுக்குறை இருக்கிறது. சில கால்நடை ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் இல்லாமல் இருக்கலாம். ஸ்டாக்மென் ஏற்பாடு செய்கிறேம். வைத்தியக் கல்லூரியிலும் ஸ்தானங்கள் அதிகப்பட்டிருக்கிறது.

SRI A. GOVINDASAMY : ஒவ்வொரு பிர்க்காவிலும் கால்நடை ஆஸ்பத்திரியை வைக்க இயலாவிட்டாலும் ஒவ்வொரு தேசிய விஸ்தரிப்புத் திட்டப்பகுதியிலுமாவது ஒரு மொபைல் ஆஸ்பத்திரி வைக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி அரசாங்கம் கவனம் செலுத்துகிறது.

SRI S. LAZAR : மொபைல் ஆஸ்பத்திரி ஒரு சில இடங்களுக்கு அனுப்பப்படுவதாகத் தெரிகிறது. ரிப்போர்ட் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர்கள் ஒவ்வொரு பிர்க்காவிலும் போய்வர ஏற்பாடு செய்யப்பட்டிருகிறதா ? அழைப்பு வரும் இடங்களுக்கே அனுப்பப்படுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மொபைல் யூனிட்டுக்குத் தனியாக டாக்டர்கள் இருக்கிருர்கள். எப்போதும் அவர்களுக்கு வேலை இருக்கும்.

SRI K. PERIANNAN : இப்போது இருந்து வரும் கால்நடை ஆஸ்பத்திரியில் போதிய மருந்து வசதி இல்லையென்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? போதிய மருந்து சப்ளை செய்ய அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறு என்னிடம் தகவல் இல்லை. மருந்து கொடுப்பதில் கஷ்டம் இருப்பதாகவும் தெரியவில்லை.

SRI C. MUTHIAH PILLAI : கால் நடை ஆஸ்பத்திரிக்கே டாக்டர்கள் கிடைக்கவில்லை என்று சொல்லும்போது அந்த டாக்டர்களை B. D. O. ஆக அனுப்புவதற்கு அவசியம் என்ன என்று கேட்கிறேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படி எடுப்பதிலும் தவறு இல்லை. கால்நடை வைத்தியத்தில் நல்ல அனுபவம் உள்ளவர்கள் B. D. O. ஆக வந்தால் அந்தப் பிராந்தியத்தில் கால்நடை வளர்ச்சி நன்ருக பரிபாலிக்கப்படும். அதுவும் வரவேற்கத் தக்கதுதான்.

[1st November 1958

SRI V. K. KOTHANDARAMAN : எஸ்.பி.ஸி.ஏ. அதிகாரிகளால் கிராமத்திலுள்ள விவசாயிகளுக்கு மிகவும் தொல்லை ஏற்படுகிறது லஞ்சம் கொடுத்து தண்டக் கட்டிக்கொண்டு போகவேண்டியிருக்கிறது என்கிற காரணத்தினால் அவர்களை எடுத்துவிட்டு கால்நடை ஆஸ்பத்திரிகளை அதற்குப் பதிலாக ஏற்படுத்த முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTHAVATSALAM : எஸ்.பி.ஸி.ஏ. அவர்கள் பிராணிகளுக்கு இம்சை செய்வதைத்தான் தடுக்க இருக்கிறார்கள். அது வேறு ஸ்தாபனம். அது சில பேருக்குப் பிடிக்கவில்லை என்றால் வெறுப் பாகத்தான் இருக்கிறது.

Utilization of the River waters in the Palni Hills for Power Supply

* 786 *Q*.— SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) பழனி மலைத்தொடரில் உற்பத்தியாகும் நதிகளிலிருக்கும் தண் ணீரை மின்சார உற்பத்திக்கு உபயோகப்படுத்துவதற்கு ஏதேனும் ஏற் பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவா ?

(ஆ) அப்படியானால், அதன் விவரங்கள் யாவை ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) No, Sir. Investigations have indicated that the water resources in the streams of the Palni Hills are very limited and consequently the quantum of power that can be generated is also very small. The scheme is not also likely to prove remunerative.

SRI N. R. THIAGARAJAN : பாலாறு புரந்தலாறு என்னும் பகுதியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று முன்பு அறிக்கையில் சொன்னார்கள். எவ்வளவு கிலோவாட் உற்பத்தி செய்யப்படும் ?

THE HON. SRI V. RAMAIAH : அப்போது நான் கொடுத்த பதில் இன்வெஸ்டிகேஷன் நடந்து கொண்டிருப்பது என்பதுதான். அதன் முடிவை இப்போது சொன்னேன். அங்கே மின் உற்பத்திக்குப் போதுமான தண்ணீர் வசதி கிடையாது. அதிகமான மின்சாரம் அங்கே எடுக்க முடி யாது என்கிறார்கள்.

SRI A. V. P. ASAITHAMBI : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்படுவதாக திராவிட முன்னேற்றக் கழகம் குற்றம் சாட்டிக்கொண்டு வரும்போது அமைச்சர் அவர்கள் தென்னாட்டில் திட்டம் போடுவதற்குப் பெரிய நதிகள் இருக்கிறதாவென்று கேட்டிருக்கி றார்கள்.

MR. SPEAKER : உங்கள் கேள்விக்கும் மூல கேள்விக்கும் சம்பந்தம் இருப்பது போலவே தெரியவில்லையே.

SRI A. V. P. ASAITHAMBI : சம்பந்தம் இருக்கிறது. இந்த மலையி லிருந்து உற்பத்தியாகும் நதிகளின் மூலமாக மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவேண் டும் என்று இந்த அரசாங்கம் சொன்ன யோசனையை மத்திய அரசாங்கத் தார் புறக்கணித்துவிட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAA H : கனம் அங்கத்தினரைச் சேர்ந்த கட்சியினர் எல்லாத் துறையிலும் வட நாட்டால் தென்னாடு புறக்கணிக் கப்படுவதாகச் சொல்வதுதான் வழக்கம். ஆனால் இந்த மின்சாரத்தைப் பொருத்த வரையில் இந்த மாகாணத்தில் உற்பத்தியாவதை வேறு எந்த மாகாணத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தாலும் கண்டிப்பாக நம் மாகாணம்தான் எல்லாவற்றிற்கும் முன்னிலையில் இருக்கிறது என்பது அவர்களுக்கே தெரிய வரும்.